**வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமூக வாழ்வாதார செயற்திட்டத்தின் (மீள் எழுச்சி செயற்திட்டம்) - 2015**

---

வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமூக வாழ்வாதார செயற்திட்டத்தின் (மீள் எழுச்சி செயற்திட்டம்) 2015 சனவரி 01 இலிருந்து ஏப்ரல் 30 வரையான கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2007 செப்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட உடன்படிக்கையினால் திருத்தப்பட்டவாறான 2004 யூலை 23 ஆந் திகதியிடப்பட்ட 3935 சீஈ இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01(ஆ)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(i) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் இச்செயற்திட்டத்திற்கு மேலதிக நிதியை வழங்குவதற்காக 2010 சனவரி 11 ஆந் திகதியிடப்பட்ட 4671 எல்கே இலக்க இரண்டாவது நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் 2011 நவம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 4956 எல்கே இலக்க மூன்றாவது நிதியளித்தல் உடன்படிக்கை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துடன் இலங்கை சனநாயக குடியரசினால் கைச்சாத்திடப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சாகிய தற்போதைய தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக இருந்தது. நிரந்தர, சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்காக வாழ்வாதாரங்களை மீளமைத்தல், விவசாய மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களையும் வருமானத்தையும் மேம்படுத்துதல், இயலளவைக் கட்டியெழுப்புதல் என்பவற்றிற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அவற்றினை அண்மித்த பிரதேசங்களிலுமுள்ள வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உதவியளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக இருந்தன. நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 16,844.42 மில்லியனுக்குச் சமனான யூ.எஸ்.டொலர் 141.14 மில்லியனானதுடன் இதில் யூ.எஸ்.டொலர் 124.70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தினதும் செயற்திட்டத்தின் நலன்பெறுனர்களினதும் பங்களிப்புக்கள் முறையே யூஎஸ் டொலர் 13.72 மில்லியன் மற்றும் யூ.எஸ்.டொலர் 2.72 மில்லியன் ஆக இருந்தன. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2004 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்தல் திகதி 2015 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா

என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து உருவாகும் செம்மையாக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த கணக்கீட்டு காலத்திற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான 09 மாவட்டங்களிலுள்ள செயற்திட்ட அமுலாக்கல் அலகுகளின் கையிலுள்ள ரூபா 18.7 மில்லியன் தொகையான காசு மீதியும் வங்கிகளில் காணப்பட்ட ரூபா 297.5 மில்லியன் தொகையான ஏனைய மீதிகளும் வெளிப்படுத்தப்படாது செயற்திட்டத்தின் சிறிய நிதியளித்தல் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட உப கடன்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

## 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியங்களிற்கான நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2015 ஏப்ரல் 30 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 ஏப்ரல் 30 வரை | |
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ கடன் இலக்கம் | | | | | | | |
| 3935 | 64.70 | 8,217.44 | 503 | 2.31 | 254.17 | 64.78 | 7,125.60 |
| 4671 | 12.00 | 1,400.28 | - | - | - | 10.36 | 1,351.56 |
| 4956 | 48.00 | 5,582.70 | 147 | 0.36 | 39.50 | 54.04 | 5,944.51 |
| ஜிஓஎஸ்எல் | 13.72 | 1,372.00 | 75 | 0.36 | 39.53 | - | 1,788.91 |
| நலன்பெறுனர்கள் | 2.72 | 272.00 | - | - | - | - | 153.55 |
| மொத்தம் | 141.14 | 16,844.42 | 725 | 3.03 | 333.20 | 129.18 | 16,364.13 |

## 3.2 பௌதீகச் செயலாற்றல்

நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானவை கிராமிய புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பெரிய நீர்ப்பாசனத் திட்டம் / சிறிய குளங்களின் புனரமைப்பு, கொத்தணிமட்ட வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் வெள்ள

பாதிப்பு புனரமைப்பு வேலைகள் ஆகிய கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களினூடாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் பின்வரும் காரணங்களால் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படாததனால் செயற்திட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியான செயற்பாடு சந்தேகத்திற்குரியதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

I. செயற்திட்ட காலத்தின் இறுதியில் சுயாதீனமான கணக்காய்வினூடாக கிராம அபிவிருத்தி அமைப்புக்களின் நிதிசார் ஸ்திரத்தன்மையானது செயற்திட்டத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

II. செயற்திட்ட நடவடிக்கைகளின் முடிவுக்குப் பின்னர் கிராம அபிவிருத்தி அமைப்புக்களின் செயற்பாடுகளானது ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளானது கிராம அபிவிருத்தி அமைப்புக்களின் வெற்றிக்காக சுயமாக பங்களிப்புச் செய்த சமூக வளவாளர்களினூடாக தொடர்புபட்ட மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சமூக வளவாளர்களுக்கு பிரதேச செயலகங்களால் ரூபா 7,000 இலிருந்து ரூபா 9,000 வரையான வீச்சில் செலுத்தப்பட்ட மாதாந்தப் படிகளை இடை நிறுத்தியதன் காரணமாக அவர்கள் கிராம அபிவிருத்தி அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்காக தங்களின் காலத்தை அர்ப்பணிப்புச் செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை என்பது பதவி சிறீபுர பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்தி அமைப்புக்களில் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக அவதானிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டது.

III. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 805 கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 723 கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் பதிவுசெய்திருந்தன. மேலும் திருகோணமலை மாவட்டத்தில் தாபிக்கப்பட்ட 51 கிராம அபிவிருத்தி அமைப்புக்களில் 12 கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள பதவி சிறீபுர பிரதேச செயலகப் பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட 09 கிராம அபிவிருத்தி அமைப்புக்களில் 05 கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் செயற்பட்டிருக்கவில்லை என்பது களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 237 முன்னணி கிராமங்களில் சுய உதவி வருமானத் தோற்றுவிப்பு நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு சிறு குழு பங்குபற்றலூடாக செயற்திட்டம் சிறிய நிதியளித்தல் திட்டங்களை அமுல்படுத்தியிருந்தது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், அவை தொடர்பான உப கடன்களை வழங்குவதற்கு செயற்திட்டத்தினால் ரூபா 1,231.05 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பின்வரும் காரணங்களால் சிறிய நிதியளித்தல் திட்டங்களின் செயற்பாடுகளது ஸ்திரத்தன்மையானது ஐயத்திற்குரியதாகக் காணப்பட்டது.

I. வழங்கப்பட்ட உப கடன்களின் அறவீட்டினை உறுதிப்படுத்துவதற்கு ஒரு சுழற்சி நிதியம் ஒன்று தாபிக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளின் முடிவுக்குப் பின்னர் அதே நோக்கங்களுக்காக கடன் வழங்குவது தொடரப்பட்டிருந்தது. உப கடன்களின் தவணைப் பணங்களை அறவிடுதல் சம்பந்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள வர்த்தக வங்கிகளின் கிளைகளால்

செய்யப்படுவதுடன் அந்நடவடிக்கைகள் தற்பொழுது சமூக வளவாளர்களால் ஒருங்கிணைக்கப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

II. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் உப கடன்களின் ரூபா 1,071 கூட்டுமொத்தமான மீதிகள் 2015 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 188.65 மில்லியன் கூட்டு மொத்தமான செயற்பாடற்ற கடன்களின் மீதிகளும் ரூபா 22.23 மில்லியன் தொகையான கடன் நட்டங்களும் அத்திகதியில் காணப்பட்டன. பதவி சிறீபுர பிரதேச செயலகத்திலுள்ள 09 கிராம அபிவிருத்தி சங்கங்களால் ரூபா 11.70 மில்லியன் பெறுமதியான உப கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1.72 மில்லியன் பெறுமதியான உப கடன்களின் மீதிகள் ஐயக் கடனாக அறிந்துகொள்ளப்பட்டமையை தெரிவுச் செவ்வை வெளிப்படுத்தியது. மேலும் மூதூர் பிரதேச செயலகப் பிரதேசத்திலுள்ள 04 கிராம அபிவிருத்திச் சங்கங்களால் 2011 இலிருந்து 2014 வரையான காலத்தின் போது ரூபா 5.83 மில்லியன் பெறுமதியான உப கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த முழுத்தொகையும் 2015 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு அறவிடப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2004 மே 25 இல் தயாரிக்கப்பட்ட மூலத் திட்டங்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நலன்பெறுனர்களுக்கு 3,026 பல்நோக்க வலை வீடுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 1,229 பல்நோக்க வலை வீடுகளை விநியோகித்த உள்ளபடியான இலக்கு எய்தப்பட்டதனை அடைந்து கொள்ளும் வகையில் 1,230 பல்நோக்கு வலை வீடுகள் வரை இலக்குகள் 2014 யூன் 05 இல் திருத்தப்பட்டிருந்தது. 04 பல்நோக்கு வலை வீடுகளின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் பிரகாரம், பதவி சிறீபுர பிரதேச செயலகப் பிரதேசத்திலுள்ள நலன்பெறுனர்களுக்கு விநியோகிக்கப்பட்ட 20 பல்நோக்கு வலை வீடுகளில் எந்தவொரு பல்நோக்கு வலை வீடும் உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. ஆகவே பல்நோக்கு வலை வீடுகளை விநியோகித்தலின் பிரயோசனத்தை கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது.

### 3.3 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 30 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்களையும் ஆவணங்களையும் கையளித்தல் முறைப்படியாகச் செய்யப்பட்டிருக்கவில்லை. திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள செயற்திட்ட அமுலாக்கல் அலகுகளில் காணப்பட்ட மோட்டார் வாகனங்களையும் மோட்டார் சைக்கிள்களையும் உள்ளடக்கிய சொத்துக்கள் தொடர்பான தேவையான தகவல்களுடன் முறையாக அங்கீகரிக்கப்பட்ட கையளித்தல் பட்டியல்களை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2015 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு கலைத்தல் நோக்கத்திற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.